அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...

ஆசிரியர் தலையங்கம் ................................... 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

இயக்க குடும்பத் திருமணம்........................2

இல்லறம் இனிக்க...................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... 5

கவிதைகள். ........................................................... 6

சிந்தனை 8 செயல் 3 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் பிப்ரவரி 2026

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## தேவை தேர்தல் சீர்திருத்தம்.

நாம் "ஊழல்" "ஊழல்" என்று பேசுகின்றோம். ஆனால், அந்த ஊழலுக்கு ஊற்றுக் கண்ணாக இருப்பதே தேர்தல் நடைமுறைதான். குடியாட்சியில் மக்களையும், அரசாங்கத்தையும் இணைப்பது தேர்தல்களே! சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்ற மக்கள் பிரதிநிதி களே அரசுக்கும் மக்களுக்கும் இடையில் பாலமாக விளங்குகின்றனர். மக்களின் பிரதிநிதிகள் சரியானவர்களாக இருந்தால்தான் நாட்டில் நல்லாட்சி அமைய முடியும்.; ஜனநாயகம் தழைத்தோங்க முடியும்.

ஆனால், இன்று வழக்கத்தில் உள்ள தேர்தல் நடைமுறைகளால் ஒரு நல்ல, எளிமையான, திறமையான, நேர்மையான மக்கள் பிரதிநிதியை தேர்ந்தெடுக்க வழி இருக்கிறதா? என்றால் "இல்லை" என்றே சொல்ல வேண்டும்.

எனவே, இப்பொழுது இருக்கின்ற தேர்தல் நடைமுறைகளில் சில அடிப்படையான சீர்திருத் தங்களைச் செய்தால் மட்டுமே உண்மையான மக்களாட்சி மலர்ந்து, அதன் நற்பயனை மக்கள் அனுபவிக்க முடியும்.

**ஊழலின் ஊற்றுக்கண் தேர்தல்:**

1.அரசியல் கட்சிகளால் தேர்தலில் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் மீது பந்தயக்குதிரை போல் கோடிக்கணக்கில் பணம் கட்டப்படுகிறது. வேட்பாளர்களும் தம் பங்குக்கு கோடிக்கணக்கில் பணம் செலவு செய்வதால், தேர்ந்தெடுக்கப்பட்டப் பிறகு கட்சிக்கு நிதியைப் பெருக்க நேர்மை யற்ற வழியில் செயல்படுவார்களா? மாட்டார்களா?

2.தேர்தலில் முதலீடு செய்த பணத்தை எப்படி பல மடங்காகத் திரும்ப எடுப்பது என்பதிலேயே ஐந்தாண்டு காலமும் கவனம் செலுத்துவார்களா? இல்லை மக்கள் நலனைப் பற்றிச் சிந்திப்பார்களா?

3.பெரும் பணக்கார நிறுவனங்கள் கட்சிகளுக்காகச் செலவு செய்வதால், அவற்றின் நலனைப் பாதுகாக்கும் ஆட்சி அமையுமா? இல்லை நடுத்தர. ஏழை மக்களுக்கான ஆட்சி அமையுமா?

4.பணமே தேர்தலில் பெரும்பங்கு வகிக்கும் நாட்டில், நேர்மையான, திறமைசாலிகள் தேர்தலில் போட்டியிட்டு வெல்ல முடியுமா?

இதுபோன்றக் கேள்விகளுக்கான விடைகளை கட்சி விருப்பு, வெறுப்பின்றி எண்ணிப் பாருங்கள். நடப்பது ஜனநாயகமா? பணநாயகமா? என்பது புரியும். தேர்தல் நடைமுறைகளே எல்லா ஊழல்களுக்கும், சீர்கேடுகளுக்கும் வித்திடுகின்றன என்பது புரியும்.

எனவே, தேர்தல் நடைமுறைகளில் இன்றியமையாத சீர்திருத்தங்களைச் செய்யாமல், பணம் என்னும் பயங்கர ஆயுதத்தை தேர்தலில் இருந்து அப்புறப்படுத்தாமல், யார் ஆட்சிக்கு வந்தாலும் ஊழலை ஒழிக்க முடியாது என்பதே உண்மை நிலையாகும்.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும். சட்டம் மற்றும் நீதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு மத்திய அரசுக்கு சில பரிந்துரைகளை 2017 க்கு முன்பே கொடுத்துள்ளது. அதன்மீது அனைத்து அரசியல் கட்சிகளும் திறந்த மனதுடன் ஒரு விரிவான கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ள வேண்டும். கண்ணியமான பொதுநல அமைப்புகளின் ஆலோசனைகளையும் பெற வேண்டும். இந்தியா வலிமையான நாடாக உலக அரங்கில் முன்னேற வேண்டுமென்றால், குடியாட்சியின் ஆணி வேராக உள்ள தேர்தல் நடைமுறையில் சீர்திருத்தங்களைச் செய்தாக வேண்டும். செய்ய முன்வருவார்களா நம் அரசியல் தலைவர்கள்? அதுபற்றிச் சிந்திப்பார்களா நம் மக்கள்?



..........அன்புடன் ஆசிரியர்

## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

துணிச்சல், கற்பனை, சமுதாயக் கோட்பாடுகளையும், சூழ்நிலைகளையும் உடைத்தெறியும் அந்தப் புதுமை மனோபாவம் நம் எல்லோரிடமும் இருக்கிறது. ஆனால் அதை நம் பயம் முடக்கிவிடுகிறது. "நம்மால் முடியுமா?" என்ற சந்தேகம் ஒடுக்கிவிடுகிறது. "பிறர் என்ன சொல்வார்களோ?" என்று எண்ணும் பேதைமை நம்மை முன்னேறாதபடி செய்துவிடுகிறது. "எனக்கேன் வம்பு"? போகிறபடி போகட்டும்" என்று பாதுகாப்பையும் பத்திரத்தையும் நாடும் போக்கு நம் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கிறது.

ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் என்ற விஞ்ஞானி கூறுகிறார், "உலகில் நாம் அனுபவிக்கும் அழகு அதில் இருக்கும் புதிர்தான். அந்தப் புதிரை விடுவிக்கும் முயற்சியில்தான் கலையும் விஞ்ஞானமும் வளருகிறது." என்று.

துருவித் துருவிப் புதிர்களுக்கு விடை காண்பதுதான் மனித இயல்பு. அதற்கேற்ப ஒரு மனோ நிலையை - துணிச்சலை - கற்பனையை நாம் வளர்த்துக் கொண்டிருந்தோமானால் நம் வாழ்க்கை இனிய சவாலாய் அமையும். மலர் தினமும் புதிதாக விரிவதைப் போல், ஆண்டு தோறும் பருவகாலம் புதிது புதிதாக வருவதைப் போல் வாழ்வு அழகுடன் அமையும்.



அப்படி ஒரு மனோநிலையை வளர்க்காவிட்டால் என்ன ஆகிவிடும்? ஒன்றும் ஆகிவிடாது. வாழ்க்கை செக்குமாடு போல் ஆகிவிடும். தாலுக்கா அலுவலக பணியாளராக வாழ்க்கையைத் தொடங்கி வயதேறிய தாலுக்கா அலுவலகப் பணியாளராக வேலை ஓய்வுப் பெற்றவர்களைப் பார்த்திருக்கிறீர்களா? ஆம் அவர்களோ பாதுகாப்பாக ஒரு பணியில் இருந்தார்கள். அவர்களில் பலரும் வாழ்க்கையில் புதுமையின் அழகைக் கண்டிருக்க மாட்டார்கள்!

## மக்கள் சக்தி இயக்க குடும்பத் திருமணவிழா

மக்கள் சக்தி இயக்க மாநிலப் பொதுச்செயலாளர்

**முனைவர்.லெ.பாஸ்கர். திருமதி. பா. சுகந்தி** அவர்களின் அன்புமகள்

திருவளர்ச்செல்வி. **பா. தமிழ்யாழினி** MA,(PhD)

**திரு.பஜன்சிங். திருமதி.லட்சுமி** அவர்களின் அன்புமகன்

திருவளர்ச்செல்வன். **ரோகன்** BBA IS (அமெரிக்கா)

இவர்களின் திருமணம் 22.02.2026 அன்று காலை மணி 8 முதல் 9.30 க்குள் தஞ்சை மருத்துவக் கல்லாரி சாலையில் அமைந்துள்ள ஆண்டாள் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திருமண நிச்சயதார்த்த நிகழ்வு 21.02.2026 அன்று மாலையில் நடைபெறும்.

இயக்கப் பண்பாளர்கள் திருமண நிகழ்வில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றேன்

மரு.த.இராசலிங்கம்
மாநிலத்தலைவர். ம.ச.இ

சென்ற இதழ் தொடர்ச்சி....

## 1.அறிவைத் தள்ளிவையுங்கள்.

ஆண், பெண் இருவரும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழத் தொடங்குவதில்தான் இல்லறம் தொடங்குகிறது. அது இனிமை நிரம்பியதாக அமைய வேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புவார்கள்.

ஆண் மகனுக்கென்று சில விருப்பு- வெறுப்புகள், பெண் மகளுக்கென்று சில விருப்பு- வெறுப்புகள் வெளிப்படையாகத் தெரியவில்லையென்றாலும், ஆழ்மனதில் இருக்கலாம். அவையெல்லாம் இருவரது அன்பிலும் ஒன்றோடொன்று கலந்து இன்பம் மட்டுமே மேலோங்கியிருப்பதுதான் இனிக்கும் இல்லறமாகும்.

ஆண், பெண் இருபாலரும் அறிவுள்ளவர்களாக விளங்க வேண்டும் என்பது மனிதர்களுக்கான பொதுவான விதி. அறிவு என்பது கற்றும், கேட்டும், அனுபவித்தும் வருவது என்றால், அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பது அறிவுக்கூர்மையாகும்.

கணவன் - மனைவி உறவில் அன்புக்கு முதலிடமா? அறிவுக்கு முதலிடமா? என்று பட்டி மன்றம் வைத்தால், “அன்பு” என்றுதான் நான் தீர்ப்பு கூறுவேன். கணவன் மனைவிக்கிடையே நிலவ வேண்டியது அன்புதானேயொழிய, அறிவு அல்ல! இனிமையான இல்லறத்தில் அறிவுக்கு இடமில்லை. அங்கு அன்புதான் முன்னே நிற்க வேண்டும். இதை நான் சொல்லவில்லை. திருவள்ளுவரே சொல்லிவிட்டார்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது என்ற குறளில்,

அன்பும் அறனும் உடைத்தாயின்... என்று வலியுறுத்திய வள்ளுவர், அன்பும் அறிவும் உடைத்தாயின் என்று சொல்லியிருக்கலாம் அல்லவா? ஆனால் அவ்வாறு சொல்லவில்லை. அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு: அறத்தைப் போற்றி வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன் என்பதே வள்ளுவரின் கூற்று. அறங்களில் ஒன்றுதான் அன்பு. எனினும் தனியே அன்புக்கு முதலிடம் வழங்கியிருப்பதற்குக் காரணம், அன்பே அறத்தை வளர்க்கும் ஆற்றல் உடையது என்பதால். அன்பின் வழிவரும் அறம் மனதைத் தூய்மையாக்குகிறது; மகிழ்விக்கிறது. அறம் என்பதே மனத்தூய்மைதான். தூய்மையான மனம் கொண்டவர்களாக, ஒருமனம் உடையவராய் கணவனும் மனைவியும் வாழும் தன்மையே இனிமையான இல்லறமாகும்.

கணவன் மனைவிக்கிடையே சில ஏற்றத்தாழ்வுகள் குறிப்பாக கல்வி நிலையில் இருக்கும் போது, அதிகம் படித்த மனைவிக்கோ, கணவனுக்கோ சிலசமயம் தான் என்ற தன்முனைப்பு - அகந்தை ஏற்பட்டுவிடக் கூடும். அந்நேரங்களில் அறிவை முன்வைத்து ஆராய்ந்து கொண்டிருக்காமல் ஒருவர் மீது ஒருவர் அன்பு பாராட்டும் போது மனக்கசப்பு பெரிதாகாமல் நீர்த்து போய்விட வாய்ப்பு உண்டாகும். .............தொடர்ந்து இல்லறம் இனிக்கும்.

**தமிழ் அறம் மின்னிதழ்**
**வெளியிடுபவர் : மருத்துவர்.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- முல்லைக்கலி

ஆயமகள் ஒருத்தியைக் காதலித்தான் ஆயமகன். எப்பொழுதும் அவள் நினைவாகவே இருக்கிறான் அவன். அவனுடைய நெஞ்சிலே காதல் உணர்வு எப்படி இருக்கிறது தெரியுமா ? தயிர் கடையும் மத்திலே பிணிக்கப்பட்டக் கயிறு சுற்றிச் சுற்றி வருவது போல அவள் நலத்தையே அவன் நெஞ்சமும் சுற்றிச் சுற்றிச் சுழலுகின்றதாம்.

**மத்தம் பிணித்த கயிறு போல், நின் நலம்**
**சுற்றிச் சுழலும் என் நெஞ்சு**................என்ற வரிகளின் உவமையழகு நம் நெஞ்சையும் சுழலச் செய்கிறது.

திருமணம் கைகூடுமா என்ற வருத்தமும், நடுக்கமும் தலைவனின் நெஞ்சிலே எழுகின்றது. அது எப்படியிருக்கிறதாம்? பொழுது விடிந்த பின்னும் வீட்டைவிட்டு மேய்ச்சலுக்குப் போகாது தொழுவினுள் கட்டியிருக்கும் தன் கன்றையே நினைந்து கொண்டிருக்கும் தலையீற்றுப் பசுவின் நிலையைப் போல இருக்கிறதாம்.

**விடிந்த பொழுதினும் இல்வயின் போகாது,**
**கொடுந் தொழுவினுள் பட்ட கன்றிற்குச் சூழும்**
**கடுஞ்சூல் ஆ நாகு போல், நிற் கண்டு, நாளும்,**
**நடுங்கு அஞர் உற்றது - என் நெஞ்சு.**

ஒரு காதலனின் மன ஏக்கத்தை இதைவிடச் சிறப்பாக விளங்க வைக்க முடியுமா என்ன ?

காதலியைக் கையால் தழுவியது மட்டுமன்றி, அவளது உள்ளத்தில் உள்ளதை அறிந்து கொள்ள முடியாமல் தவிக்கின்ற காதலன், என் உயிரை மீண்டும் என்னிடம் கொடுத்துவிடு என்று புலம்புகின்றானாம்.அவ்வாறு புலம்புகின்ற அவன் நிலைமை எவ்வாறு இருக்கின்றதாம். நெய் கடைந்து எடுத்துவிட்டப் பால் போல் பயன் குன்றி இருக்கின்றதாம். எத்துணை அழகான உவமை? இதோ அந்தப் பாடல்.

**எவ்வம் மிகுதர, எம் திறத்து, எஞ்ஞான்றும்,**
**நெய் கடை பாலின் பயன் யாதும் இன்றாகி,**
**கை தோயல் மாத்திரை அல்லது, செய்தி**
**அறியாது - அளித்து என் உயிர்**

முல்லைக் கலியாதலால் தயிர்க்கடை மத்து, பசு, தொழுவம், பால், நெய் போன்ற சொற்களைப் பயன்படுத்தி உவமையழகுடன் செய்யுட்களைப் படைத்துள்ள புலவரின் ஆற்றல் எண்ணி எண்ணி வியப்புறும் வண்ணம் உள்ளது.

........உவமையழகு தொடரும்



**கரூர் மாவட்ட ம.ச.இ** . குடியரசு தினத்தை முன்னிட்டு கரூர் மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் சார்பாக **தாந்தோணி** ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, வினாடி வினாப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவிற்கு மாநில துணைச்செயலாளர் **சுகுமார்** தலைமை தாங்கினார். மாநில ஆலோசகர் திரு. **வெ.பி.முத்து** முன்னிலை வகித்தார். **ஊராட்சி மன்றத்தலைவர்** சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். தலைமையாசிரியர். திருமதி **புவனா** வரவேற்புரையாற்றினார். பரிசளிப்பு விழாவில் மாணவர்களுடன் பெற்றோர்கள், முன்னாள் மாணவர்கள், ம.ச.இ பண்பாளர்கள் கலந்து கொண்டனர். உதவித் தலைமையாசிரியர் நன்றியுரை வழங்கினார்.
விழா ஏற்பாடுகளை மாவட்டச்செயலாளர். திரு.**வை.க.முருகேசன்** சிறப்பாகச் செய்திருந்தார்.





**தூத்துக்குடி மாவட்ட ம.ச.இ** குடியரசு தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் சார்பாக **எக்ஸ்டென்ஷன் நடுநிலைப் பள்ளியில்** மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி, கதை சொல்லும் போட்டி, செய்யுள் ஒப்புவித்தல் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. திருமதி. **சிவஜோதி** சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி. **ரமணி** மற்றும் ஆசிரியர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# ஆணவ அழுக்கு...

தீயவை
ஆகிடும்

தீயென
எரிந்திடும்

பேயென
ஆட்டிடும்

மகுடம்
சூட்டிடும்!

கௌரவம்
அகலுமே

தகாதவை
புகலுமே

அழிவுகள்
ஆகுமே

ஆட்டியும்
படைக்குமே!

தாழ்வுகள்
நேருமே

பேணவும்
வேண்டுமோ?

இழுக்குகளுக்கு
இடமேது?

ஆணவ அழுக்கை
அகற்றியபோது!

கவி.கலியுகன் கோபி
சென்னை

# சமுதாயம் சாயுது!

பழக்கமும் வழக்கமும்
மாறியே போகுது
பைந்தமிழ் பண்புகள்
நாறியே மாறுது!

செழுமையும் சிறப்புமே
சரிந்துமே மாயுது
செம்மறி இனங்களாய்
சமுதாயம் சாயுது!

பாழான கிணறுதான்
பாசனம் தாருமோ?
பாய்மரம் கிழிந்திட
படகுதான் ஓடுமோ?

வாழையின் தென்னையின்
வளர்ச்சியும் தேயுது
வாய்க்காலில் கால்வாயில்
நீருமா பாயுது?

கோழைகள் கைவசம்
நாடுதான் போவதால்
கொள்கையும் கோலமும்
குழியிலே வீழுது!

பேழையில் பெரும்பணம்
பெறுபவர் நெஞ்சமோ
பேடியாய் ஆகியே
பயன்தர அஞ்சுது!

பாவலர்.சு.சண்முகசுந்தரம்
புதுச்சேரி